செய்தி வெளியீடு எண்: 143 நாள் : 01.03.2016

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (1.3.2016) தலைமைச் செயலகத்தில், இந்துசமய அறநிலையத் துறை சார்பில் 41 கோடியே 14 லட்சத்து 6 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களையும், சுற்றுலாத் துறை சார்பில் நாமக்கல் மாவட்டம், ஜேடர்பாளையத்தில் 3 கோடியே 64 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட பூங்கா, கலை பண்பாட்டுத் துறை சார்பில் சென்னை அரசு கவின் கலைக் கல்லூரியில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கலைக்கூடம் மற்றும் ஆவணக் காப்பகக் கூடம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

தமிழ்ப் பண்பாட்டின் பெட்டகமாகவும், ஆன்மீகத்தின் இருப்பிடமாகவும், கலைத்திறனின் நிலைக் களமாகவும் விளங்குகின்ற திருக்கோயில்களின் சொத்துக்களைப் பாதுகாத்து பராமரித்தல், வழிபாடுகளை நடத்துதல், அன்னதானம் உட்பட இறையன்பர்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றித் தருதல் போன்ற பணிகளை இந்து சமய அறநிலையத் துறையின் மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் – சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் கட்டப்பட்டுள்ள பக்தர்கள் தங்கும் மண்டபம், வேலூர் மாவட்டம் – சோளிங்கர் அருள்மிகு லட்சுமி (யோக) நரசிம்மசுவாமி திருக்கோயில், காஞ்சிபுரம் மாவட்டம் – பூவிருந்தவல்லி அருள்மிகு திருக்கச்சி நம்பிகள் மற்றும் வரதராஜப்பெருமாள் திருக்கோயில், திருவள்ளூர் மாவட்டம் – திருமழிசை அருள்மிகு ஜெகந்நாதப்பெருமாள் மற்றும் திருமழிசை ஆழ்வார் திருக்கோயில், புட்லூர் அருள்மிகு பூங்காவனத்தம்மன் என்கிற அங்காள பரமேஸ்வரி திருக்கோயில், தேனி மாவட்டம் – வீரபாண்டி அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயில், குச்சனூர் அருள்மிகு சுயம்பு சனீஸ்வர பகவான் திருக்கோயில், மதுரை மாவட்டம்– தென்கரை அருள்மிகு மூலநாதசுவாமி திருக்கோயில், சென்னை மாவட்டம்–வில்லிவாக்கம் அருள்மிகு சௌமியதாமோதரப் பெருமாள் திருக்கோயில், அமைந்தகரை அருள்மிகு ஏகாம்பரேஸ்வரர் திருக்கோயில், பாடி அருள்மிகு திருவல்லீஸ்வரர் திருக்கோயில், தஞ்சாவூர் மாவட்டம் – பட்டீச்சரம், அருள்மிகு தேனுபுரீஸ்வரசுவாமி திருக்கோயில், தஞ்சாவூர் மாவட்டம் – கும்பகோணம், அருள்மிகு நாகேஸ்வரசுவாமி திருக்கோயில், திருவண்ணாமலை மாவட்டம் – ஆவணியாபுரம் அருள்மிகு லட்சுமி நரசிம்மர் சுவாமி திருக்கோயில், முனுகம்பட்டு அருள்மிகு பச்சையம்மன் மன்னார்சுவாமி திருக்கோயில்,

கடலூர் மாவட்டம் – திருவதிகை அருள்மிகு வீரட்டானேஸ்வரர் திருக்கோயில், திருப்பாதிரிப்புலியூர் அருள்மிகு வீர ஆஞ்சநேயர் திருக்கோயில், சேலம் மாவட்டம் – சேலம் அருள்மிகு கோட்டை மாரியம்மன் திருக்கோயில், திருவாரூர் மாவட்டம் – மன்னார்குடி அருள்மிகு இராஜகோபாலசுவாமி திருக்கோயில், திருப்பாம்புரம் அருள்மிகு சேஷபுரீஸ்வரர் திருக்கோயில், திருச்சிராப்பள்ளி மாவட்டம் – இலால்குடி அருள்மிகு சப்தரிஷீஸ்வரர் திருக்கோயில், விருதுநகர் மாவட்டம் – அருப்புக்கோட்டை அருள்மிகு சொக்கநாதசுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் கட்டப்பட்டுள்ள 21 அன்னதானக் கூடங்கள்;

திண்டுக்கல் மாவட்டம் – பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில் கட்டப்பட்டுள்ள 4 பணியாளர் குடியிருப்புகள்; திண்டுக்கல் மாவட்டம் – பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், திருவண்ணாமலை மாவட்டம் – அம்மன் கோயில் படவேடு அருள்மிகு ரேணுகாம்பாள் திருக்கோயில், சேலம் மாவட்டம் – வடசென்னிமலை அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில், நாமக்கல் மாவட்டம் – திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில், இராமநாதபுரம் மாவட்டம் – இராமேசுவரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள குளியலறை மற்றும் கழிவறைகள்;

திண்டுக்கல் மாவட்டம் – பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், கன்னியாகுமரி மாவட்டம் – திற்பரப்பு தேவஸ்வம் உயர்நிலைப்பள்ளி ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைகள்; திண்டுக்கல் மாவட்டம் – பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில் கட்டப்பட்டுள்ள நூலகம்; திண்டுக்கல் மாவட்டம் – பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில் கட்டப்பட்டுள்ள ஆய்வகம்;

திண்டுக்கல் மாவட்டம் – பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில், திருவண்ணாமலை மாவட்டம் – அம்மன் கோயில் படவேடு அருள்மிகு ரேணுகாம்பாள் திருக்கோயில், சேலம் மாவட்டம் – வடசென்னிமலை அருள்மிகு பாலசுப்பிரமணியசுவாமி திருக்கோயில், நாமக்கல் மாவட்டம் – திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில், புதுக்கோட்டை – விராலிமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருப்பூர் மாவட்டம் – அய்யம்பாளையம் அருள்மிகு வாழை தோட்டத்து அய்யன் திருக்கோயில், இராமநாதபுரம் மாவட்டம் – இராமேசுவரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், தூத்துக்குடி மாவட்டம் – திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள பக்தர்கள் தங்கும் கூடங்கள்;

திண்டுக்கல் மாவட்டம் – பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலின் உபகோயில்களான ஊதியூர் அருள்மிகு உத்தண்ட வேலாயுதசுவாமி திருக்கோயில், கணவாய்ப்பட்டி அருள்மிகு கருப்பண்ணசுவாமி திருக்கோயில், க. தருமத்துப்பட்டி அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், தூத்துக்குடி மாவட்டம் – திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் கட்டப்பட்டுள்ள சஷ்டி மண்டபம் மற்றும் காவடி மண்டபங்கள்; கோயம்புத்தூர் மாவட்டம் – மருதமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், கன்னியாகுமரி மாவட்டம் – தோவாளை அருள்மிகு கிருஷ்ணசுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் கட்டப்பட்டுள்ள வணிக வளாகங்கள்;

தேனி மாவட்டம் – வீரபாண்டி அருள்மிகு கௌமாரியம்மன் திருக்கோயில், சேலம் மாவட்டம் – சங்ககிரி அருள்மிகு சோமேஸ்வரர் மற்றும் வரதராஜப்பெருமாள் திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் கட்டப்பட்டுள்ள செயல் அலுவலர் மற்றும் ஆய்வர் அலுவலக கட்டடங்கள்; திருவண்ணாமலை மாவட்டம் – அம்மன் கோயில் படவேடு அருள்மிகு ரேணுகாம்பாள் திருக்கோயிலில் கட்டப்பட்டுள்ள பொருட்கள் பாதுகாப்பு அறை மற்றும் தகவல் நிலையம்; நாமக்கல் மாவட்டம் – திருச்செங்கோடு அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலில் கட்டப்பட்டுள்ள குடிநீர் வசதிக்கான நீர்த்தேக்கத் தொட்டி; மதுரை மாவட்டம் – அழகர்கோயில் அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலில் கட்டப்பட்டுள்ள நேர்த்திக் கடன் செலுத்தும் மண்டபம்; திருநெல்வேலி மாவட்டம் – சங்கரன்கோவில் அருள்மிகு சங்கரநாராயணசுவாமி திருக்கோயிலில் கட்டப்பட்டுள்ள திருமண மண்டபம்; வேலூர் மாவட்டம் – சோளிங்கர் அருள்மிகு லட்சுமி (யோக) நரசிம்மசுவாமி திருக்கோயிலில் கட்டப்பட்டுள்ள கருணை இல்லம்; திருவண்ணாமலை மாவட்டம் – திருவண்ணாமலை அருள்மிகு அருணாசலேஸ்வரர் திருக்கோயிலில் கட்டப்பட்டுள்ள சன்னியாசிகள் தங்கும் விடுதி;

திருவண்ணாமலை மாவட்டம் – அ.கோ. படவேடு அருள்மிகு ரேணுகாம்பாள் திருக்கோயில், இராமநாதபுரம் மாவட்டம் – இராமேசுவரம் அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், திண்டுக்கல் மாவட்டம் – பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயில் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள வாகனங்கள் நிறுத்துமிடங்கள்;

என மொத்தம் **41** கோடியே **14** லட்சத்து **6** ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் இந்து சமய அறநிலையங்கள் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

மேலும், நாமக்கல் மாவட்டம், ஜேடர்பாளையத்தில் காவேரி நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணைப் பகுதியில் 3 கோடியே 64 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் படகு இல்லம், நீராடும் படித்துறை, சிறுவர் விளையாட்டு சாதனங்கள், கம்பி வலை வேலி, சிற்பங்கள் ஆகிய வசதிகளுடன் மேம்படுத்தப்பட்ட பூங்கா;

சென்னை, அரசு கவின் கலைக் கல்லூரியில் 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கலைக்கூடம் மற்றும் 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆவணக் காப்பகக் கூடம்;

என மொத்தம் 4 கோடியே 64 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் சுற்றுலா, கலை மற்றும் பண்பாட்டுத் துறை சார்பில் அமைக்கப்பட்டுள்ள கலைக்கூடம், ஆவணக் காப்பகக் கூடம் மற்றும் மேம்படுத்தப்பட்ட பூங்கா ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு உணவு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு. ஆர். காமராஜ், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி. சண்முகநாதன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு.கே.சி. வீரமணி, தலைமைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் (பொறுப்பு) / இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் முனைவர் மா. வீர சண்முக மணி, இ.ஆ.ப., சுற்றுலாத் துறை ஆணையர் திரு. ஹர் சஹாய் மீனா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 1.3.2016